## ஏப்ரல் – 11 – வியாழன்

**தூய தனிஸ்லாஸ்**

**“என் வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார் என உறுதியாக உங்களுக்கச் சொல்லுகின்றேன்” யோவா8:51**

### முதல் வாசகம் : தொடக்க நூல் 17 : 3 – 9.

அந்நாட்களில், ஆபிராம் பணிந்து வணங்க, கடவுள் அவரிடம் கூறியது : ”உன்னுடன் நான் செய்துகொள்ளும் உடன்படிக்கை இதுவே. எண்ணற்ற நாடுகளுக்கு நீ தந்தை ஆவாய். இனி உன்பெயர் ஆபிராம் அன்று ”ஆபிரகாம்” என்ற பெயரால் நீ அழைக்கப்படுவாய். ஏனெனில் எண்ணற்ற நாடுகளுக்கு உன்னை நான் மூதாதையாக்குகிறேன். மிகப் பெருமளவில் உன்னைப் பலுகச் செய்வேன் உன்னிடமிருந்து நாடுகளை உண்டாக்குவேன். உன்னிடமிருந்து அரசர்கள் தோன்றுவர். தலைமுறை தலை முறையாக உன்னுடனும், உனக்குப்பின் வரும் உன் வழிமரபின ருடனும் என்றுமுள்ள உடன்படிக்கையை நான் நிலைநாட்டுவேன். இதனால் உனக்கும் உனக்குப்பின் வரும் உன் வழிமரபினருக்கும் நான் கடவுளாக இருப்பேன். நீ தங்கியிருக்கும் நாட்டையும் கானான் நாடு முழுவதையும் என்றுமுள்ள உரிமைச் சொத்தாக உனக்கும் உனக்குப்பின் உன் வழி மரபினருக்கும் வழங்குவேன். நான் அவர்களுக்குக் கடவுளாக இருப்பேன்” என்றார். மீண்டும் கடவுள் ஆபிரகாமிடம், ”நீயும் தலைமுறைதோறும் உனக்குப்பின் வரும் உன் வழிமரபினரும் என் உடன்படிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உடன்படிக்கையை என்றென்றும்
நினைவில் கொள்கின்றார்.

### நற்செய்தி : யோவான் 8 : 51 - 59

அக்காலத்தில் இயேசு யூதர்களிடம், என் வார்த்தையைக் கடைப் பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார். யூதர்கள் அவரிடம், ”நீ பேய் பிடித்தவன் தான் என்பது இப்போது தெரிந்துவிட்டது. ஆபிரகாம் இறந்தார் இறைவாக்கினர்களும் இறந்தார்கள். ஆனால் என் வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார் என்கிறாயே! எங்கள் தந்தை ஆபிரகாமைவிட நீ பெரியவனோ? ஆபிரகாம் இறந்தார் இறைவாக்கினரும் இறந்தனர். நீ யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?” என்றார்கள். இயேசு மறுமொழியாக, ”நானே என்னைப் பெருமைப்படுத்தினால், அது எனக்குப் பெருமை இல்லை. என்னைப் பெருமைப்படுத்துபவர் என் தந்தையே. அவரையே நீங்கள் உங்கள் தந்தை என்றும் சொல்கிறீர்கள். ஆனால் அவரை உங்களுக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். எனக்கு அவரைத் தெரியாது என நான் சொன்னால் உங்களைப்போல நானும் பொய்யனாவேன். அவரை எனக்குத் தெரியும். அவருடைய வார்த்தையையும் நான் கடைபிடிக்கிறேன். உங்கள் தந்தை ஆபிரகாம் நான் வரும் காலத்தைக் காண முடியும் என்பதை முன்னிட்டுப் பேருவகை கொண்டார் அதனைக் கண்டபோது மகிழ்ச்சியும் கொண்டார்” என்றார். யூதர்கள் அவரை நோக்கி, ”உனக்கு இன்னும் ஐம்பது வயதுகூட ஆகவில்லை. நீ ஆபிரகாமைக் கண்டிருக்கிறாயா?” என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம், ”ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார். இதைக் கேட்ட அவர்கள் அவர்மேல் எறியக் கற்களை எடுத்தார்கள். ஆனால் இயேசு மறைவாக நழுவிக் கோவிலிலிருந்து வெளியேறினார்.

**தியானம் :** “ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தைகடவுளோடு இருந்தது. அது கடவுளாயும் இருந்தது”. “வார்த்தை மனுவுருவானார். நம்மிடையே குடிகொண்டார்” என்ற இறைவார்த்தைகளையும் நாம் அடிக்கடி கேட்டிருக்கின்றோம். இவ் வார்த்தைகளை நாம் இன்னும் ஆழமாகத் தியானித்து, அவற்றை விசுவசித்து, அந்த வார்த்தை வழியே நாம் வாழ்ந்திட இன்றைய திருவாசகங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. ஒன்றுமில்லாமையிலிருந்து உலகனைத்தையும் படைத்த வார்த்தை: ஆபிரகாமுக்கு உறுதிமொழியளித்து இன்றுவரை அவரது வழிமரபை காத்து வழிநடத்திவரும் வார்த்தை, குருடர் பார்க்கவும், முடவர் நடக்கவும், இறந்தோரை உயிர்ப்பிக்கவும் செய்த வார்த்தை: காற்றையும், புயலையும் அடக்கிய வார்த்தை வேறு ஏதுவுமல்ல, இறைமகன் இயேசுவேதான் என்பதை ஆணித்தரமாக இன்றைய இறைவாசகங்கள் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. மனுவுரு தரித்த கடவுளின் வார்த்தையாம் இறைமகன் இயேசு ‘முடிவற்ற வாழ்வை’ நமக்கு உறுதியளித்து நிற்கின்றார். நம் வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் துன்பங்கள், இழப்புகள், தோல்விகள், மனவேதனைகள் நம்மை கடவுளின் வார்த்தையில் நம்பிக்கை இழக்கச் செய்யக்கூடும். இத்தகைய நிகழ்வுகள் நமது முழு வாழ்க்கைச் சரித்திரத்தின் சிறு சிறு அத்தியாயங்கள் மட்டுமே என்பதை நாம் உணர்ந்து, நமது வாழ்க்கைச் சரித்திரத்தை வரைந்த சரித்திர நாயகனாம் இறைமகன் இயேசுவின் வார்த்தை வழியே நமது பயணத்தைத் தொடர்ந்தால், நமக்குத் தோல்வியில்லை. இழப்பில்லை, ஏன்? இறப்பு என்பதே இல்லை.